26/8/2021

211

சட்ட (சக)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

கடித (நிலை) எண்.251, நாள் 13.08.2021.

அனுப்புநர்

திரு. ச. கோபி ரவிகுமார், எம்.ஏ., எம். எல்.,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

1. சட்டக் கல்வி இயக்குநர், கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
2. திரு.ஆ.கேசவ், இளநிலை உதவியாளர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (சட்டக் கல்வி இயக்குநர் மூலமாக)

ஐயா,

17
26/08/21

பொருள்: சட்டத்துறை – கருணை அடிப்படை நியமனம் - காலஞ்சென்ற திரு.என்.ஆறுமுகம் என்பவரது மகன் திரு.ஆ.கேசவ், 24.06.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் வரன்முறைப்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. சட்டக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.2247/அ2/ 2020, நாள் 31.12.2020, 17.03.2021, 26.03.2021, 07.05.2021, 08.07.2021 மற்றும்20.07.2021.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் (ம) நிருவாக சீர்திருத்தத்துறை, நாள் 01.08.2018.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) துறை, நாள் 26.02.2021.

•••••

பார்வை 1-இல் காணும் கடிதத்தில், சட்டக்கல்வி இயக்குநர், மற்றவற்றுக்கிடையே, பட்டறைப்பெரும்புதூர் சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில், பதிவுரு எழுத்தராகப் பணியாற்றி பணியிலிருக்கும்போதே, 22.11.2018 அன்று மரணமடைந்த திரு.என்.ஆறுமுகம் என்பவரது மகன் திரு.ஆ.கேசவ், என்பவரை கருணை அடிப்படையில் பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில், இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டதாகவும், அவர் 24.06.2019 முற்பகல் பணியில் சேர்ந்ததாகவும் தெரிவித்து தனியரது பணியினை வரன்முறைப்படுத்திடுமாறு கோரி அது தொடர்பான ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை அரசுக்கு சமர்ப்பித்துள்ளார்.

2. கருணை அடிப்படையில், தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டவரின் தந்தை திரு.என்.ஆறுமுகம் என்பவர், பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில், பதிவுரு எழுத்தராகப் பணிபுரிகையில் 22.11.2018 அன்று காலமானார். அவர் பணியிலிருக்கும் காலத்தில் காலமானதைத் தொடர்ந்து, கருணையடிப்படையில் பணிவாய்ப்பு

Scanned by CamScanner

வழங்கும் திட்டப்படி, அவரது மகன் திரு.ஆ.கேசவ், இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தப்பட்டார். திரு.ஆ.கேசவ், இளநிலை உதவியாளர் பதவிக்கான கல்வித் தகுதியினையும், வயதுத் தகுதியினையும் பெற்றிருந்தார். மேலும், திரு.ஆ.கேசவ் என்பவருக்கு பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் தடையேதும் தெரிவிக்கவில்லை.

3. பார்வை 2-இல் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கும் திட்டப்படி, பணியமர்த்தப்படும் நபர்களை பொறுத்தமட்டில், அவர்களது பணியினை வரன்முறைப்படுத்துவது தொடர்பாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளதென ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. பார்வை 3-இல் காணும் அரசாணையில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வோ (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கோ (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்பட வேண்டும் எனவும், மேலும் இதனை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

5. இந்நிலையில், சட்டக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை பரிசீலித்த அரசு, அதனை ஏற்று, பட்டறைப்பெரும்புதூர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில், பதிவுரு எழுத்தராகப் பணிபுரிகையில் 22.11.2018 அன்று காலமான திரு.என்.ஆறுமுகம், என்பவரின் மகன் திரு.ஆ.கேசவ், என்பவர் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் 24.06.2019 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறைப்படுத்தப்படுவதால், தனியரின் ஊதிய நிலுவை, ஊதிய உயர்வுகள் ஏதேனுமிருப்பின் அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

தங்கள் உண்மையுள்ள,

13/08/2021.

அரசு செயலாளருக்காக.

13/8/21

**நகல்:**

1. முதல்வர், சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, பட்டறைப்பெரும்புதூர். (சட்டக் கல்வி இயக்குநர் வழியாக)
2. கருவூல அலுவலர், திருவள்ளூர்.
3. இருப்பிடத் தணிக்கை அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

இ.கோ./உதிரி.

Scanned by CamScanner